பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
25 03 2025 7 15
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை வரும் 2047ஆம் ஆண்டுக்குள் எட்டுவதற்கு பழங்குடியின மக்கள் தங்களது பங்களிப்பை அளிக்க முன்வர வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. நாட்டில் காசநோயை இந்த ஆண்டுக்குள் ஒழிப்பதற்கான தீவிர நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெபி. நட்டா தெரிவித்துள்ளார்.

3. பாதுகாப்புத்துறையின் தளவாட உற்பத்தி ஒரு லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

4. எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுத்து வருவதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி தெரிவித்துள்ளார்.

5. ஆசியக் கோப்பைக்கான தகுதிச் சுற்று கால்பந்து போட்டியின் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்திய அணி – பங்களாதேஷ் அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை வரும் 2047ஆம் ஆண்டுக்குள் எட்ட வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும், அதற்கு பழங்குடியின மக்கள் தங்களது பங்களிப்பை அளிக்க முன்வர வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டில் உள்ள பழங்குடியின கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இரண்டு நாள் பயணமாக ஒடிசா மாநிலம் சென்றுள்ள குடியரசுத்தலைவர், **Nayagarh** மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்திய அரசின் பல்வேறு திட்டங்களைப் பயன்படுத்தி பழங்குடியினர் சுயசார்பு மிக்கவர்களாக முன்னேற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**Shabara** பழங்குடியின மக்கள் தங்களுடைய பாரம்பரிய கலாச்சாரங்களை பாதுகாத்து வருவது பாராட்டுக்குரியது என்று அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி வரும் 30ஆம் தேதி ஒலிபரப்பாகிறது.

இந்த நிகழ்ச்சியில் மக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது 120வது நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சிக்காக மக்களிடம் இருந்து அதிக அளவில் கருத்துகள் பெறப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சமூக முன்னேற்றத்திற்காக அதிக அளவிலான ஆலோசகள் வருவதை அதில் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் தங்களுடைய கருத்துக்களை 1800 117800 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தெரிவிக்கலாம் என்றும், நமோ செயலி மூலமாகவும் தங்களது கருத்துக்களை பதிவு செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 30ஆம் தேதி இந்த நிகழ்ச்சி அகில இந்திய வானொலி, தூர்தர்ஷன், அகில இந்திய வானொலியின் இணையதளம் **NewsonAir** செயலி, டிடி நியூஸ், **PMO,** தகவல் ஒலிபரப்புத்துறை உள்ளிட்ட யூ-டியூப் சானலிலும் ஒலிபரப்பாகிறது.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

<<<<>>>>

நாட்டில் காசநோயை இந்த ஆண்டுக்குள் ஒழிப்பதற்கான தீவிர நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற உலக காசநோய் தின விழிப்புணர்வு மாநாட்டில் பேசிய அவர், நாட்டில் உள்ள 455 மாவட்டங்களில் ஏற்கனவே இதற்கான பிரச்சாரம் நடைபெற்றுள்ளதாக கூறினார்.

இதன் மூலம் 13 கோடி மக்கள் பரிசோதனை செய்யப்பட்டதாகவும், இதில் 7 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு காசநோய் இருப்பது கண்டறியப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

காசநோய்க்கான சிகிச்சையானது 59 சதவீதத்தில் இருந்து 85 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

உலக அளவில் காசநோய் குறையும் விகிதம் 8 புள்ளி சதவீதமாக உள்ளது என்றும், அதேநேரத்தில் இந்தியாவில் காசநோய் குறைப்பு விகிதம் 17 புள்ளி 7 சதவீதமாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

இதன் காரணமாக உலக நாடுகள் இந்தியாவில் காசநோய் எதிர்ப்பு பிரச்சார வழிமுறைகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

பிரதமரின் காசநோய் ஒழிப்பு திட்டத்தின்கீழ் ஒரு கோடியே 51 லட்சம் காசநோயாளிகள் சிகிச்சை எடுத்து வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

<<<<>>>>

பாதுகாப்புத்துறையின் தளவாட உற்பத்தி ஒரு லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014-15ஆம் ஆண்டுகளில் 46 ஆயிரத்து 429 கோடி ரூபாயாக இருந்த ராணுவ தளவாட உற்பத்தியானது தற்போது 174 சதவீதம் அளவுக்கு உயர்ந்துள்ளதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ராணுவ தளவாடங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வந்த நிலையில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு பாதுகாப்புத்துறை பலப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராணுவ தளவாட ஏற்றுமதியானது 686 கோடி ரூபாயில் இருந்து தற்போது 21 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

சிறுபான்மையினரின் சமூக பொருளாதார கல்வி நிலைகளை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை தமது அரசு செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று திமுக சார்பில் நடைபெற்ற புனித ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், ஹஜ் பயணிகளுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் மானியம் வழங்க தமது அரசு உத்தரவிட்டதாக தெரிவித்தார்.

இதன் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் தமிழகத்தில் இருந்து 11 ஆயிரத்து 364 ஹஜ் பயனாளிகளுக்கு 24 கோடியே 56 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சிறுபான்மையின மக்கள் பயன்பெறும் விதத்தில் 405 கோடி ரூபாய் அளவிற்கு அரசு நிதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தொன்மையான பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்களை புனரமைக்கும் பணிகளுக்கு 10 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குடியுரிமை திருத்தச் சட்டம் மூலமாக அச்சுறுத்தல் ஏற்பட்டபோது அதற்கு எதிராக மக்கள் இயக்கத்தை நடத்தி ஒரு கோடி மக்களிடம் கையெழுத்து பெற்று குடியரசுத்தலைவருக்கு அனுப்பி வைத்ததை அவர் நினைவுகூர்ந்தார்.

<<<<>>>>

உலக அளவில் பெட்ரோல் டீசல் விலை குறைந்து வரும் ஒரே பொருளாதார நாடாக இந்தியா உள்ளது என்று மத்திய பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி மாநிலங்களவையில் தெரிவித்துள்ளார்.

கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக அவர் அளித்துள்ள பதிலில், பெட்ரோல் டீசல் விலை நிர்ணயம் குறித்து பொதுத்துறை நிறுவனங்கள் முடிவெடுத்து வருவதாகவும், தில்லியில் பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு 94 ரூபாய் 77 காசாகவும், டீசல் விலை 87 ரூபாய் 67 காசாக உள்ளது என்றும் கூறினார்.

பொதுத்துறை நிறுவனங்களின் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக விலை கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பெட்ரோல் டீசல் மீதான மத்திய கலால் வரி லிட்டருக்கு முறையே 13 மற்றும் 16 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளதாகவும், இதன் பலன்கள் முழுமையாக நுகர்வோருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் ஹிராநகர் பகுதியில் பாதுகாப்புப் படையினர் நேற்று நடத்திய சோதனையின்போது ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து இன்று அதிகாலை முதல் ட்ரோன்கள், மோப்ப நாய்கள் மூலம் தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக எல்லைப் பகுதியில் ஊடுருவிய பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த தீவிரவாதிகள் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர்.

பாதுகாப்புப் படையினர் திருப்பித் தாக்கியதையடுத்து, ஆயுதங்களை போட்டுவிட்டு அவர்கள் தப்பிச் சென்றதாக பாதுகாப்புத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் அந்தப் பகுதியில் தீவிரவாதிள் மறைந்திருக்கக் கூடும் என்ற அடிப்படையில் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

<<<<>>>>

பொதுத்துறை நிறுவனங்களின் 50 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ரிசர்வ் வங்கி இன்று வாங்க இருக்கிறது.

இதன்மூலம் பங்குச்சந்தையின் பரிவர்த்தனை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

மேகாலய மாநில அரசு மற்றும் இந்தியன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் இணைந்து நடத்தும் 7வது கிழக்கு வர்த்தக நிகழ்ச்சி இன்று தொடங்கி வரும் வியாழக்கிழமை வரை நடைபெறுகிறது.

இந்த நிகழ்ச்சியை இன்று அம்மாநில முதலமைச்சர் திரு. கான்ராட் சங்மா தொடங்கி வைக்கிறார்.

இதன் மூலம் வடகிழக்கு மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

ஏ.எஃப்.சி. ஆசியக் கோப்பைக்கான தகுதிச் சுற்று கால்பந்து போட்டியின் 3வது சுற்றுப் போட்டி மேகாலயா மாநில தலைநகர் ஷில்லாங்கில் நடைபெறுகிறது.

இன்று மாலை 7 மணிக்கு நடைபெறும் இந்தப் போட்டியில் இந்திய அணி – பங்களாதேஷ் அணியை எதிர்கொள்கிறது.

--------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி, ஒரு விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்ற போட்டியில் முதலில் விளையாடிய லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 209 ரன் எடுத்தது.

210 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தில்லி அணி 9 விக்கெட்டுகளை இழந்து 3 பந்துகள் மீதமிருக்கையில் 211 ரன்கள் எடுத்து ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அசுதோஷ் ஷர்மா அதிகபட்சமாக 66 ரன் எடுத்தார்.

அகமதாபாதில் இன்று நடைபெறும் போட்டியில் குஜராத் - பஞ்சாப் அணிகள் மோதுகின்றன.

இந்தப் போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**